# மெட்ரோ ரயில்நிலையங்களில் டாக்சி, ஷேர் ஆட்டோ சேவை தொடக்கம்

சென்னை, ஆக. 11: சென்னையில் மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து 3 கி.மீ. தூரம் உள்ள பகுதிகளுக்கு டாக்சி, ஷேர் ஆட்டோ சேவை சனிக்கிழமை தொடங்கியது.

மெட்ரோ ரயில் சேவையைப் பயன்படுத்தும் பயணிகளுக்கு போக்குவரத்து இணைப்பை மேலும் எளிமையாக்கும் விதமாக, ஷேர் ஆட்டோ மற்றும் டாக்சி சேவை குறிப்பிட்ட மெட்ரோ ரயில் நிலையங்களில் சனிக்கிழமை தொடங்கப்பட்டது.

இச்சேவையை தனியாருடன் இணைந்து மெட்ரோ ரயில் நிர்வாகம் வழங்குகிறது. தேர்வு செய்யப்பட்ட சில மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து 6 மாத காலத்துக்கு இந்த சேவைகள் சோதனை அடிப்படையில் அமல்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, கோயம்பேடு, ஆலந்தூர், அண்ணாநகர் கிழக்கு, ஏஜி டி.எம்.எஸ், வடபழனி ஆகிய 5 நிலையங்களில் இருந்து டாக்சி சேவையும் அசோக்நகர், ஆலந்தூர், ஈக்காட்டு தாங்கல், கிண்டி, கோயம்பேடு, பரங்கி மலை, திருமங்கலம் மெட்ரோ ரயில்நிலையங்களில் ஷேர் ஆட்டோ சேவையும் சனிக்கிழமை தொடங்கியது.



3 கிலோ மீட்டர் மட்டுமே: மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து ஷேர் ஆட்டோ மற்றும் டாக்சி சேவை 3 கி.மீ. தூரத்திலான பகுதிகளுக்கு மட்டுமே தற்போது இயக்கப்படுகிறது. காலை 6.30 மணி முதல் இரவு 9.30 மணி வரையிலும் இச்சேவை வழங்கப்படும்.

## நிலையங்கள், வழித்தடங்கள், கட்டணங்கள் விவரம்

### டாக்சி சேவை: ரூ.15 கட்டணம்

| மெட்ரோ நிலையங்கள் | வழித்தடங்கள் |
|---|---|
| கோயம்பேடு | வி.ஆர். மால், பாடி மேம்பாலம், சரவணா ஸ்டோர், திருமங்கலம். |
| ஆலந்தூர் | தாமரை ஐடி பூங்கா, சிபெட் தலைமை அலுவலகம், கிண்டி பேருந்து நிறுத்தம். |
| அண்ணாநகர் கிழக்கு | 3 கி.மீ. சுற்றளவிலான பகுதிக்கும் டாக்சி சேவை வழங்கப்படும். |
| ஏஜி டிஎம்எஸ் | ஆழ்வார்பேட்டை, போஸ்ச் அலுவலகம், செம்மொழிப் பூங்கா. |
| வடபழனி | சிம்ஸ் மருத்துவமனை, முருகன் கோயில், மேனகா கார்ட்ஸ். |

### ஷேர் ஆட்டோ சேவை: ரூ.10 கட்டணம்.

| | |
|---|---|
| அசோக்நகர் | மத்திய பொதுப் பணித்துறை அதிகாரிகள் குடியிருப்பு, செக்டர் –9, 10, ஆர்.டி.ஓ. மைதானம், செக்டர்–12, அண்ணா நகர் சாலை. |
| ஆலந்தூர் | பட்சாலை, சென்னை வர்த்தக மையம், மியாட் மருத்துவமனை, செயின்ட் பாட்ரிக்ஸ் தேவாலயம். |
| ஈக்காட்டுதாங்கல் | கிண்டி தொழிற்பேட்டை, கிண்டி பேருந்து நிலையம், திரு வி.க. நகர் தொழிற் பேட்டை. |
| கிண்டி | ரேஸ் கோர்ஸ், பீனிக்ஸ் மார்க்கெட் சிட்டி, விஜயநகர் சந்திப்பு, வேளச்சேரி. |
| கோயம்பேடு | பாடி குப்பம், முகப்பேர் தொழிற் பேட்டை, ஜெ.ஜெ. நகர், முகப்பேர் மேற்கு, எம்.ஜி.ஆர். கல்லூரி, டேனியல் தாமஸ் பள்ளி. |
| பரங்கிமலை | மேடவாக்கம் பிரதான சாலை, ஐ.ஆர்.ஆர். மேடவாக்கம் பிரதான சாலை, |
| திருமங்கலம் | 3 கி.மீ. சுற்றளவிலான பகுதி. |